**மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியம் - 2017**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக் காட்சிசாலை சட்டத்தின் 8(5) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை மிருகக் காட்சிசாலை அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

**இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7**

(அ) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான ஆக்கப்பூர்வமான வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 41,677,205 தொகை கிரயத்தை உடைய 08 வகையான சொத்துக்கள் முற்றாக பெறுமானத் தேய்வு கழித்திருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டுள்ள மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களை பெறுமானத் தேய்வு கழித்தல் அந்த சொத்துக்களை பயன்படுத்துவதற்காக தயார் நிலைக்கு கொண்டு வந்த பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக நிதியத்தினால் சொத்துக்கள் கொள்வனவு செய்திருந்த ஆண்டிலேயே பெறுமானத் தேய்வு கழித்தல் கொள்கை ஒன்றாக கடைபிடிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2012 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 37,450,474 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவைகள் வழங்கும் நிறுவனம் என்ற வகையில் மிருகக் காட்சிசாலை திணைக்களத்தின் மிருகக் காட்சிசாலை நிதியம் தொடர்பாக சேகரிக்கப்படும் முக்கிய வருமானமாகிய நுழைவுப்பத்திர விற்பனை வருமானத்தில் இருந்து விற்பனவு கிரயம் என ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட கால்நடை உணவு, கால்நடை மருந்து மற்றும் நுழைவுப்பத்திர அச்சுச் செலவு ரூபா 269,066,681 இற்கான பெறுமதியினை விற்பனை கிரயமென சீராக்கல் மேற்கொண்டு மொத்த இலாபத்தினை கணித்தல் முறைசார்ந்ததள்ள என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நினைவுப் பொருட்கள் விற்பனை செய்தல் நிதியத்தின் முக்கிய வருமானத்திற்கு புறம்பான விடயம் ஒன்றாக இருந்தமையால் அது தொடர்பாக இலாபம் மற்றும் நட்டம் வேறாக கணித்து நிதியத்தின் மிகை/ பற்றாக்குறை கணக்கில் சீராக்கல் செய்ய வேண்டும் எனினும் நிதியத்தினால் அவ்வாறு செய்யால் அதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 86,972 தொகைக்காக வருமானம் வேறு வருமானம் என அதற்கான விற்பனைக் கிரயம் பிரதான செயற்பாடுகள் தொடர்பாக விற்பனை கிரயத்தில் காட்டப்பட்டிருந்தது.

(இ) விற்பனவு கிரயத்தை கணிக்கும் போது நினைவு பண்டங்களின் ஆரம்ப இருப்பு மீதி ரூபா 1,004,237 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டு தொடர்பான மிகை அதே தொகையினால் மிகையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) நிதியத்துடன் தொடர்புடைய 30 ஒப்பந்த வேலைகளுக்காக மிருகக் காட்சிசாலை திணைக்களத்தின் புத்தகங்களில் பதிவு செய்திருந்த வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு திருப்பி செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள மற்றும் நியதிச் சட்ட முறையிலான தடுத்து வைத்தல்கள் முறையே ரூபா 733,222 தொகை மற்றும் ரூபா 545,000 தொகை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 5.2.4 | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் பாதீடு, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனினும் பாதீடு 2018 மார்ச் 08 திகதியே அனுமதிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு சுற்றறிக்கையின் பிரகாரம் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 507,779,651 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 581,182,256 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 73,402,605 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதியத்தின் விற்பனவு வருமானம் ரூபா 99,285,580 இனால் குறைவடைதல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகள் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை மிகை அதிகரித்திருந்த போதிலும் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது மிகை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களின் தேய்மானம் மற்றும் அரசுக்கு செலுத்திய வரியினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 455,874,028 தொகைக்கான பங்களிப்பு 2015 ஆண்டளவில் ரூபா 715,337,322 வரையும் இடையறாத வளர்ச்சி ஒன்று காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 637,250,621 தொகை வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக் காட்சிசாலை சட்டத்தின் பிரகாரம் ஆன நிதியத்தின் குறிக்கோள்களில் பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(i) தேசிய மிருகக் காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தின் நிருவாக அலுவல்களுக்காக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர் குழாம் ஒன்று சேர்க்கப்படல்.

(ii) தெஹிவலை மிருகக் காட்சிசாலையை பார்வையிடுவதற்காக வருவோர்களுக்காக வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான விஷேட இடங்கள் வழங்குதல்.

(iii) மிருகக் காட்சிச்சாலை தொடர்பாக அனைத்து விடயங்களும் மற்றும் கேள்விகள் மீது பணிப்பாளருக்குக் ஆலோசனை வழங்குதல் மற்றும் அமைச்சருக்கு விதந்துரைக்கும் கருமத்திற்காக அமைச்சரினால் அறிவுரைக் குழு ஒன்று நியமனம் செய்தல்.

(iv) மேற்கூறிய அறிவுரை குழுக் கூட்டங்கள் குறைந்தளவு ஒவ்வொரு ஆண்டிலும் இருமுறை நடாத்தல்.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்குத் திட்டமிட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 168,500,000 தொகைக்கான 16 செயற்திட்டங்களில் மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 50,500,000 தொகைக்கான 10 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே அளவில் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 118,000,000 தொகைக்கான மதிப்பீட்டு கிரயத்தையுடைய 06 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே மாதம் அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(இ) இலங்கையில் சுற்றுலாவுக்கு வருகின்ற வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகள் 2012 ஆண்டு முதல் படிப்படியாக அதிகரித்திருந்ததுடன் கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் முறையே 2,050,832 பேர் மற்றும் 2,116,407 பேர் இலங்கைக்கு வந்திருந்தனர். எனினும், மிருகக் காட்சிசாலையை பார்வையிடுவதற்கு வந்திருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை

முறையே 415,776 மற்றும் 369,685 மாத்திரமாகும். அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மிருகக் காட்சிசாலையை பார்வையிடுவதற்கு வந்திருந்த வெளிநாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை 11 சதவீதத்தினால் குறைந்திருந்தது. அதேபோல், சுதந்திரமான சுற்றாடல் ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ரிதியகம மற்றும் வாகொல்ல போன்ற மிருகக் காட்சிசாலைக்கு வருகின்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சுற்றுலா உளப்பாங்கு மற்றும் எதிர்பார்ப்புக்கள் வித்தியாசப்படுவதற்கு ஏற்ற விதமாக வசதிகளை முன்னேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவலை தேசிய மிருகக் காட்சி சாலையில் அமைந்துள்ள இரண்டு உணவுப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் மற்றும் நினைவுப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றும் ஹம்பாந்தோட்டை ரிதியகம சபாரி பூந்தோட்டத்தில் இரண்டு சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் நினைவுப் பொருட்கள் விற்பனவு நிலையம் பெறுகை செயற்பாடுகளுக்கு புறம்பாக தெரிவு செய்யப்பட்ட 03 அரச நிறுவனங்களுக்கு வாடகை உடன்படிக்கை மேற்கொண்டிருக்காமல் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் வாகொல்ல மிருகக் காட்சி சாலை தொடர்பாக 2018 மே மாதம் மேற்கொள்ளப்பட்ட தள பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு தென்னை ஓலை வழங்கும் பெறுகையில் உரிய மாதிரிகளாகிய தென்னை ஓலைகளில் இலைகள் ஆரம்பிக்கும் இடம் முதல் வெளியே இருக்கக் கூடிய துடுப்பின் கூடிய நீளம் 06 அங்குலங்கள் எனினும் அவதானம் மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளின் போது வழங்கியிருந்த தென்னை ஓலைகளில் துடுப்பின் நீளம் 1 அடி உம் 05 உம் இடையில் காணப்பட்டது. பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாதிரிகள் தொடர்பாக 06 அங்குலங்களை விட கூடிய துடுப்புகளின் தேறிய பாரம் சுமார் 200 கிலோகிராம் காணப்பட்டதுடன் பாரத்திற்கு அந்த இருந்த துடுப்புகளின் பெறுமதி ரூபா 5,960 தொகையாகும். இவை வருடாந்தம் வழங்க வேண்டிய எண்ணிக்கையுடன் இணக்கஞ் செய்த போது அவ்வாறு 06 அங்குலங்களை விடக் கூடுதலான துடுப்புக்கள் என மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூபா 4,353,720 தொகை பெறுமதியான சுமார் 146,000 கிலோகிராம் ஆகும்.

(ii) பின்னகவல யானை சரணாலயத்தில் யானைகளுக்காக ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்பட்டிருந்த தென்னை ஓலைகளின் நியம பாரத்தை அளவு, பண்புகள் மற்றும் நியமங்கனை பரிசோதனை செய்வதற்கு போதியளவு பதவியணியினர் காணப்படாமை.

(iii) பின்னவல யானை சரணாலயத்திற்கு தென்னை ஓலைகள் வழங்கும் ஒப்பந்தக்காரர்கள் மூவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அனைத்து வழங்கல்களும் ஒருவரின் மூலம் மாத்திரம் நடைபெற்றுள்ளது.

(iv) பின்னவல யானைகள் சரணாலயத்தின் மிருக சாணம் மீள்சுழற்சிக்கு உட்படுத்தல் நடவடிக்கை எடுக்காமல் முறைசாரா விதமாக குவிக்கப்பட்டிருந்தது.

(v) பின்னவல யானை சரணாலயத்தின் மிருக வைத்தியசாலையில் எக்ஸ்டிரே இயந்திரம் 2014 ஆண்டு முதல் செயற்படாமல் இருந்ததினால் அத்தியவசியமாக கதிர்வீச்சு விடயங்கள் வெளி வைத்தியசாலைகளின் மூலம் மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

(vi) பின்னவல யானைகள் சரணாலத்தில் மருந்து களஞ்சியத்தில் காலவதியான மற்றும் அகற்றுவதற்கு திட்டமிட்டிருந்த பண்டங்கள் காணப்பட்டமை, சில மருந்துப் பொருட்கள் முறையற்ற விதமாக களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்டமை மற்றும் களஞ்சியத்தில் வாயு சீராக்கல் இயந்திரம் ஒன்று காணப்படாமை.

(vii) பின்னவல யானைகள் சரணாலத்தில் மற்றும் வாகொல்ல மிருகக் காட்சி சாலையின் நுழைவுப் பத்திரங்கள் களஞ்சியப்படுத்துவதற்கு பாதுகாப்பு இரும்புப் பெட்டி இருக்கவில்லை. அத்துடன், நுழைவுப்பத்திரங்கள் பாதுகாப்பற்ற முறையில் காசாளர் பிரிவில் வைத்திருத்தல் மற்றும் காசாளர்களினால் நுழைவுப்பத்திரங்கள் தொடர் இலக்க அடிப்படையில் வழங்கப்பட்டிருக்காததுடன் நுழைவுப்பத்திர பதிவேடு ஒன்றில் பதிவு செய்து வழங்கும் நடைமுறை ஒன்று காணப்படாமை.

(viii) பின்னவல யானைகள் சரணாலயத்தில் 2013 ஆண்டு முதல் நுழைவுப்பத்திரங்களின் விலை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியாகிய 2018 ஜூன் 01 திகதி அளவில் 2013 ஆண்டில் அச்சிடப்பட்ட நுழைவுப் பத்திரங்கள் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டதுடன் 2013 ஆண்டின் போது அச்சு கிரயம் ரூபா 445,300 பெறுமதியான 289,000 நுழைவுப்பத்திர இருப்பொன்று மீதியாக காணப்படல்.

## 4.3 நிதியங்களின் குறைபயன்பாடு

பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் கல்வி மற்றும் ஆய்வு செலவுகள், நினைவு பண்டங்கள், மிருகங்களை பரிமாற்றல் மற்றும் மிருகங்களின் இனவிருத்தி, ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்தல் ஆகியவற்றிற்காக முறையே ரூபா 1,500,000 தொகை, ரூபா 1,000,000 தொகை, ரூபா 1,400,000 தொகை மற்றும் ரூபா 50,000,000 தொகைக்கான நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தியிருக்காததுடன், விற்பனை மேம்பாடு மற்றும் விளம்பரப்படுத்தல்களுக்காக ஒதுக்கியிருந்த ரூபா 1,000,000 ஏற்பாடுகளின் 76 சதவீதமும் ஹம்பாந்தோட்டை மற்றும் பின்னவல மிருகக் காட்சி சலைகளின் அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 300,000,000 ஏற்பாடுகளின் 81 சதவீதமும் பயன்படுத்தியிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவான பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

ரூபா 9,584,223 தொகை பெறுமதியான 04 மோட்டார் வாகனங்கள் 2014 ஆண்டு முதல் கணக்காய்வு திகதியாகிய 2018 ஜூன் வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 5 கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஒரு உத்தியோகத்தரை மாத்திரம் கொண்டிருந்ததுடன், அதன் பிரகாரம் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மேற்பார்வை செய்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பகுதியை பொருத்தமான விதத்தில் திட்டமிட்டு செயற்படுத்தியிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

### 5.2.1 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

வாகொல்ல மிருகக் காட்சி சாலையில் ரூபா 59,977,712 தொகைக்கான முதலை அரண் நிறுவும் செயற்திட்டத்தில் முதலைகள் இருக்கும் குளத்திற்கு குறுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த பலகை பாலத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பலகை பாலத்திற்கான அளவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கும்புக் மரத்திற்கு பதிலாக தூலான் மரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு பயன்படுத்தப்பட்ட மரங்களும் உக்கிய நிலையில் காணப்படாமையால் அதற்கு நுழைவதை நிறுவாகத்தினால் தடை செய்யப்பட்டிருந்தது. நுழைவுப்பாதையின் மரத்தாலான கை வேலி (Hand Rail) பலம் குறைந்ததாகவும் பாதுகாப்பற்ற விதமாகவும் நிர்மானிக்கப்பட்டிருந்தமையால் பாடசாலைகளில் பிள்ளைகள் மற்றும் பார்வையாளர்கள் விபத்துக்களுக்கு ஆளாக இடமுள்ளதென 2018 ஜுன் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 5.2.2 தாமதமாகிய செயற்திட்டங்கள்

ரூபா 59,647,462 தொகை மதிப்பீட்டு கிரயத்தை உடைய ஹம்பாந்தோட்டை சபாரி பூந்தோட்டத்தில் அவுஸ்திரேலியா வலயத்தின் நிர்மாண வேலைகளுக்காக மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2017 மார்ச் 09 திகதி அளவில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வு திகதியாகிய 2018 மே 30 திகதி வரை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 08 விடயங்களில் 76 சதவீதம் முதல் 100 சதவீதங்கள் வரை கணிசமான அளவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 5.4 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் பந்தி 6.5.3 இன் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை கணக்கு ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவேண்டுமெனினும், 2016 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை கணக்காய்வுத் திகதியாகிய 2018 ஜுன் 30 அளவில் பாராளமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

# 6 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | பதிவேடுகள் பேணப்படல் | நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாண வேலைகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக அனைத்து விபரங்களும் அடங்கிய ஒப்பந்த வேலை பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமை. |
| (ஆ) | இருப்புப் கட்டுப்பாடு | பிராந்திய அலுவலகங்களின் இருப்புப் பதிவேடு உரிய முறையில் பேணப்பட்டிருக்காமை. |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்காமை. |